மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பெருங்காப்பியமாம் சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் பெயரிலே விருது வழங்கிட ஆணையிட்டு, தொன்மையான தமிழர்களின் பெருமையையும், தமிழறிஞர்களையும் காத்து தமிழர்கள் வாழ்வில் தலைநிமிர்ந்திட அனுதினமும் உழைத்திடும் எங்கள் தமிழ் அன்னையை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மேட்டுப்பாளையம் நகரத்திலே அமைந்திருக்கின்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் வாகனங்களை உள்ளடக்கி, ஆண்டு ஒன்றுக்கு 15 ஆயிரம் புதிய வாகனங்களைப் பதிவு செய்து வருகிறது. இந்த நிலையில், நீண்டநெடுங்காலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிற அந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குத் தேவையான இடம் தேர்வு செய்யப்பட்டு, வெகு விரைவிலே அங்கே வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும், ஓட்டுநர் தேர்வுத் தளமும் அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்திருப்பதற்கு வாழும் மனித தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 308, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

308—

ஆவின் பாலகம்

•35326—திரு. ஆர். சீனிவாசன்:

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2014 ஆகஸ்ட் 1]

ஆற்காடு தொகுதி, ஆற்காடு பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகர் பேருந்து நிலையத்தில் பாலகம் அமைக்க தலைவர்/செயல் அலுவலர், ஆற்காடு நகராட்சி அவர்களிடம் இடம் ஒதுக்கீடு செய்து திருமாறு வேலூர்–திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் சார்பில் கோரப்பட்டுள்ளது. இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன், அந்த இடத்தில் ஆவின் பாலகம் அமைக்க வேலூர்–திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.*

திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆற்காடு நகர் பேருந்து நிலையத்திற்குட்பட்ட பகுதியில் ஆவின் பாலகம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் ஆற்காடு நகரக் கழக மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், இந்திரா நகர் பகுதியில் ஆவின் சார்பாக பாலகம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட இடத்தில் பாலகம் அமைப்பதற்கு கோரிக்கை மனு பெறப்பட்டவுடன், அந்த இடம் எந்தத் துறையைச் சார்ந்தது என்று பரிசீலனை செய்து, ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 309, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

309—

விதைப் பண்ணை

***630—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அரசு விதைப் பண்ணையைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?